ID. No. 140/2002

25-04-2022

W.W.1. ரவிக்குமார்.

குறுக்கு விசாரணை :

நீங்கள் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் கடைசியாக எந்த ஆண்டு பணி பார்த்தீர்கள் என்றால் 1992-ம் ஆண்டு 3-ம் மாதம் 24 அல்லது 25-வது தேதியாக இருக்கும் சரியாக ஞாபகம் இல்லை. நீங்கள் பணியில் இருந்து நின்ற பிறகு 1992-ம் ஆண்டிற்கு பிறகு உடனடியாக வருங்கால வைப்பு நிதி தொகையை வாங்கவில்லை என்றால் சரி. நீங்கள் 16-08-2021-ல் வருங்கால வைப்பு நிதி தொகையை Ex. W. 56 ஆவணத்தில் வாங்கியுள்ளீர்கள் என்றால் சரி. இந்த Ex.W. 56 ஆவணத்தில் எந்த ஆண்டில் இருந்து எந்த ஆண்டு வரைக்குமான வருங்கால வைப்பு நிதி என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் என்று சாட்சியிடம் ஆவணத்தை காண்பித்து கேட்க என்றால் எதுவும் குறிப்பிடவில்லை. ஏற்கனவே நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் நீங்கள் எந்த ஆண்டில் பணியில் சேர்ந்துள்ளீர்கள் என்று குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆகையால் Ex. W. 56 ஆவணத்தில் அடிப்படையில் நீங்கள் எந்த ஆண்டில் இருந்து எந்த ஆண்டு வரைக்கும் பணி பார்த்தீர்கள் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரியல்ல. Ex. W. 56 ஆவணம் செயலாளர் BHEL EPF Trust Trichy என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. BHEL EPF Trust Trichy அவர்களை உங்கள் தரப்பில் ஒரு சாட்சியாக விசாரணை செய்தால் நீங்கள் எப்போது இருந்து எப்போது வரை வேலை செய்தீர்கள் என்ற விபரம் தெரியவரும் என்றால் சரி. Ex. W. 56 ஆவணம் எதிர்மனுதாரரிடம் மனு எழுதிக்கொடுத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல மனுவாக கொடுத்து தான் வாங்கினேன். நான் கோரிக்கை

செய்த மனுவின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. ஆகையால் நீங்கள் அப்படி ஒரு கோரிக்கை மனுவை தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. Ex. W. 56 ஆவணத்தின் படி தொகையைப் பெறும் போது வழக்கு நிலுவையில் உள்ளது ஆகையால் ஆட்சேபணையுடன் பெற்றுக்கொள்கிறேன் என்று எந்த குறிப்பும் நீங்கள் செய்யவில்லை என்றால் சரி. நீங்கள் EPF சம்பந்தமான ஆவணங்கள் நிர்வாகத்தில் இருப்பதாக சொல்வது இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. Ex. W. 56 ஆவணமானது EPF Trust பராமரிக்கப்படுவது எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கும் இதுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. ஆகையால் நீங்கள் போட்டுள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

Ex. W. 56 ஆவணம் எந்த அலுவலகத்தில் இருந்து பெற்றீர்கள் என்றால் BHEL அலுவலகத்தில் தான் பெற்றேன். BHEL அலுவலகத்திற்கு நானாக தான் சென்று நேரடியாக மனு கொடுத்து ஆவணத்தைப் பெற்றுக்கொண்டேன். என்னுடைய கோரிக்கை மனுவில் நான் எத்தனை நாள் வேலை செய்தேன் அந்த வேலை செய்த நாட்களுக்காக பிடித்தம் செய்த பணத்தை கொடுக்குமாறு கேட்டேன். அப்போது Ex. W. 56 ஆவணத்தை மட்டும் தான் எனக்கு கொடுத்தார்கள்.

<u>மறு குறுக்கு விசாரணை</u>

Ex.W. 56. ஆவணத்தை நீங்கள் அப்படி ஒரு கோரிக்கை மனுவை தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.W. 56

ஆவணத்தை எதிர்மனுதாரர் உங்களுக்கு எப்போதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கட்ள உங்கள் மறுவிசாரணையின் போது சொல்லியுள்ள விபரங்களை உங்களது இடை மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.